செ.வெ.எண்-41 நாள்-22.01.2021

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், அரியலூர் மண்டலத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் பருவத்தில் மட்டும் பணியாற்றிட தற்காலிகமாக பட்டியல் எழுத்தர்கள் 10 நபர்களும் (2) உதவுபவர்கள் 20 நபர்களும் (3) காவலர்கள் 20 நபர்களும் தேர்வு செய்யப்பட உள்ளார்கள், காலி பணியிடத்திற்கு ஆண்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. (பெண்கள் விண்ணப்பிக்க வேண்டாம்)

பட்டியல் எழுத்தருக்கான கல்வி தகுதி பி.எஸ்சி. (உயிரியல்) பட்டம் தேர்ச்சி, உதவுபவர் பணிக்கான கல்வி தகுதி +2 (HSC) தேர்ச்சி, (பட்டியல் எழுத்தர் மற்றும் உதவுபவர் பணிக்கு பத்தாம் வகுப்பு மற்றும் +2 கட்டாயம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்) காவலர் பணிக்கான கல்வி தகுதி 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். வயது நிர்ணயத் தேதி 01.01.2020 அன்றைய நிலையில் வயது வரம்பு SC/ST 35-க்கு மிகாமல், MBC/BC/BCM 32-க்கு மிகாமல், OC 30-க்கு மிகாமல் (குறைந்தபட்ச வயது வரம்பு 18 வயதை பூர்த்தி செய்தவராக இருத்தல் அவசியமாகும்).

இப்பணியிடங்கள் நெல் கொள்முதல் பருவத்திற்கு மட்டும் பயன்படுத்தப்படும். மேலும், இப்பணி முற்றிலும் தற்காலிகமானது. அரியலூர் மாவட்டத்தை இருப்பிடமாக கொண்ட மேற்காணும் கல்வி தகுதியுடைய ஆண் விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் எதிர்வரும் **25.01.2021** (திங்கள்) அன்று காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பெருந்திட்ட வளாகம், (பழைய கலெக்டர் ஆபீஸ் பின்புறம்), ஜெயங்கொண்டம் மெயின் ரோடு, அரியலூர் என்ற முகவரியில் விண்ணப்பங்கள் வழங்கப்படும். (விண்ணப்பத்தின் விலை ரூ.20/-) எனவே, பாஸ்போர்ட் அளவுள்ள இரண்டு புகைப்படங்களுடன் நேரில் ஆஜராகி விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், 25.01.2021 அன்று மாலை 5.00 மணிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**